இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“உலகிற்கு நீங்கள் உப்பாகவும், ஒளியாகவும் இருக்கிறீர்கள்” என்று இளையோரை நோக்கி கூறிய திருத்தந்தை, “கிறிஸ்துவுக்காக நீங்கள் எழுப்பும் பெருங்குரல் உலகின் கடையெல்லை வரை கேட்கட்டும்” என்றும் எடுத்துரைத்தார்.

# உலகம் விரும்பும் நம்பிக்கையின் செய்தி இளையோரே!

ஜூலை 29, இச்செவ்வாய் மாலை, புனித பேதுரு பெருங்கோவிலின் வளாகத்தில், புதிய வழிகளில் நற்செய்தி அறிவித்தலை ஊக்குவிக்கும் திருப்பீடத்துறையின் தலைவர், பேராயர் ரானோ பிசிகெல்லா அவர்கள் தலைமையில் நிறைவேற்றப்பட்ட இளையோருக்கான யூபிலியின் தொடக்கவிழாத் திருப்பலிக்குப் பிறகு திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் அங்குக் கூடியிருந்த இளையோரை வரவேற்று வாழ்த்துக் கூறினார்.

“உலகிற்கு நீங்கள் உப்பாகவும், ஒளியாகவும் இருக்கிறீர்கள்” என்று இளையோரை நோக்கி கூறிய திருத்தந்தை, “கிறிஸ்துவுக்காக நீங்கள் எழுப்பும் பெருங்குரல் உலகின் கடையெல்லை வரை கேட்கட்டும்” என்றும் எடுத்துரைத்தார்.

மேலும், “நம்பிக்கையின் செய்தி தேவைப்படும் இவ்வுலகிற்கு, நம்பிக்கையைக் கொண்டுச் செல்ல வேண்டும்” என்றும், “இளையோராகிய நீங்களே அந்த நம்பிக்கையின் செய்தி” என்றும் அவர்களிடம் வலியுறுத்தினார் திருத்தந்தை.

“இளையோராகிய நீங்கள் அனைவரும் எப்போதும் உலகில் நம்பிக்கையின் அடையாளங்களாக இருக்கிறீர்கள்” என்று நம்புவதாகத் தெரிவித்த திருத்தந்தை, “அமைதியை விரும்பும் நாம் அனைவரும், கிறிஸ்துவில் மீதுள்ள நம்பிக்கையில் ஒன்றாக பயணித்து, உலக அமைதிக்காக குரல் கொடுத்து, இறைவேண்டல் செய்வோம்” என்றும் கூறினார்.

இறுதியாக, “இந்த உலகம் தேடும், கிறிஸ்துவின் அமைதிக்கு நாம் அனைவரும் சான்று பகர்வோம்” என்று கூறி அவர்கள் அனைவருக்கும் தனது அப்போஸ்தலிக்க ஆசிரையும் வழங்கினார் திருத்தந்தை.







திருப்பலியின் போது மறையுரை வழங்கிய பேராயர் Fisichella அவர்கள், “நீங்கள் அனைவரும் உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாக இருக்க வேண்டும்” என்று வலியுறுத்தியதுடன், “உயிர்த்த இயேசுவை கண்டு, விசுவாசித்து, அவ்விசுவாசத்தை செயலாக மாற்றும் நம் அனைவரும் ஒரு போதும் அஞ்ச வேண்டாம்” என்றும் கூறினார்.

ஜெர்சிலின் டிக்ரோஸ் - வத்திக்கான்

# "சமூகங்கள் மோதலின் னண்டுதலுக்கு அடிபணியக் கூடாது": திருத்தந்தை

இந்தக் காணொளிச் செய்தி யூபிலி ஆண்டின் கருப்பொருள்களுடன் ஒத்துப்போகும் அதேவேளை, இப்புனித ஆண்டின் மகிழ்ச்சியைப் பெறுவதற்கான திருத்தந்தையின் நோக்கங்களுக்காக இறைவேண்டல் செய்யவும் விசுவாசிகளை அழைக்கிறது.



இன, அரசியல், மத அல்லது கருத்தியல் காரணங்களால் ஏற்படும் உள் மோதல்களைத் தவிர்க்க சமூகங்கள் இறைவேண்டல் செய்ய வேண்டும் என்று, ஜூலை 29, இச்செவ்வாயன்று வெளியிட்ட ஆகஸ்ட் மாதத்திற்கான தனது இறைவேண்டல் கருத்தில் கேட்டுக்கொண்டுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

மோதலுக்குப் பதிலாக உரையாடல், இரக்கம் மற்றும் உடன்பிறந்த உறவை மக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

அச்சம், தப்பெண்ணம் மற்றும் பிரிவினையை வெல்வதற்கு, நமது பகிரப்பட்ட மனிதகுலத்தை அதாவது, அனைவரும் ஒரே கடவுளின் குழந்தைகளாக இருக்கிறோம் என்பதை அங்கீகரிப்பது அவசியம் என்று மேலும் வலியுறுத்தியுள்ளார் திருத்தந்தை.

உண்மையான அமைதி என்பது நமது இதயத்தில் தொடங்குகிறது என்றும், நீதியை மேம்படுத்துவதிலும், பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதிலும், ஒன்றிப்பை வளர்ப்பதிலும் அனைத்து நாட்டு அரசுகளுக்கும் பங்கு உண்டு என்றும் இக்காணொளிச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை.

இந்தக் காணொளிச் செய்தி இந்த யூபிலி ஆண்டின் கருப்பொருள்களுடன் ஒத்துப்போகும் அதேவேளை, இப்புனித ஆண்டின் மகிழ்ச்சியைப் பெறுவதற்கான திருத்தந்தையின் நோக்கங்களுக்காக இறைவேண்டல் செய்யவும் விசுவாசிகளை அழைக்கிறது.

இயேசு சபை தகவல் தொடர்பு பணியகத்துடன் (JesCom) இணைந்து உருவாக்கப்பட்டுள்ள இந்தக் காணொளி, உலகளாவிய பிளவு மற்றும் வன்முறையின் வலிமை வாய்ந்த படங்களைக் கொண்டுள்ளது.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# விண்ணேற்புப் பெருவிழா: கத்தோலிக்க நம்பிக்கை

**இந்த மாதம், கத்தோலிக்கர்கள் அன்னை மரியாவின் விண்ணேற்புப் பெருவிழாவை கொண்டாடுகிறார்கள். இது இயேசு கிறிஸ்துவின் தாயான மரியாவின் ஆன்மா மற்றும் உடல் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை நினைவுகூரும் முக்கிய திருநாள்.**


திருத்தந்தை பன்னிரண்டாம் பயஸ் 1950 ஆம் ஆண்டில், மரியாவின் விண்ணேற்பை கத்தோலிக்க விசுவாசத்தின் ஒரு கோட்பாடாக (dogma) அதிகாரப்பூர்வமாகப் பிரகடனம் செய்தார். "அமல உற்பவியான இறைவனின் தாய், எக்காலக் கன்னியான மரியா, தனது பூவுலக வாழ்க்கைப் பயணத்தை நிறைவு செய்தபின், உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மாட்சிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்" என்று அவர் அறிவித்தார்.

"முனிஃபிசென்டிசிமஸ் டேயுஸ்" (Munificentissimus Deus) என்ற அப்போஸ்தலிக்க அரசியலமைப்புச் சட்டம், இந்த நம்பிக்கையின் நீண்டகால மரபுகளையும், ஆரம்பகாலத் திருச்சபைத் தந்தைகளின் சாட்சியங்களையும், விவிலியப் பகுதிகளின் இறையியல் விளக்கங்களையும் சுட்டிக்காட்டியது.

மரியாவின் விண்ணேற்பு விவிலியத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், கத்தோலிக்க மரபு அவரை திருவெளிப்பாட்டுப் புத்தகத்தின் 12 ஆம் அதிகாரத்தில் வரும் "கதிரவனை ஆடையாக அணிந்த பெண்" உடன் அடையாளம் காட்டுகிறது.

கிழக்கு கிறிஸ்தவர்களும் மரியாவின் விண்ணக விண்ணேற்பை தங்கள் நம்பிக்கையின் ஒரு பகுதியாகக் கருதுகின்றனர். அங்கு இது "நித்திரைப் பெருவிழா" என்று அழைக்கப்படுகிறது. இந்த விழாவுக்கு முன்னதாக இரண்டு வார நோன்புக் காலமும் உண்டு.

விண்ணேற்புப் பெருவிழா, ரோமன் மற்றும் கிழக்குச் சடங்கு கத்தோலிக்கர்கள் அனைவருக்கும் ஒரு கட்டாயப் புனித நாள் ஆகும். அன்று அவர்கள் திருப்பலி அல்லது திவ்ய பலியில் கலந்துகொள்வது அவசியம்.



# பாமோல் தோட்டத்தில் புனித அன்னம்மாள் திருவிழா

## ஜொகூர் பாமோல் தோட்டத்தில் புனித அன்னம்மாள் திருவிழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது

முதல் நாள் கொடியேற்றம் தினமாகவும் அதன் பின் ஏழு நாட்கள் நவநாள் ஜெபத்துடன் ஆண்டவருக்கு புகழ் ஆராதனையாகவும் ஒப்புகொடுக்கப்பட்டு 26.7.2025 அன்று சனிக்கிழமை அருள்பணியாளர் எட்ரியன் பிரான்சிஸ் அவர்களால் திருவிழா திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

தமது மறையுரையில், இன்று நாம் ஊக்கமுமின்றி, மகிழ்ச்சியின்றி, சோகத்துடன், கவலையுடன், மன அமைதின்றி கூடியிருக்கக்கூடும். ஆயினும் நம்மில் பலர் எதிர்பார்ப்புகளுடன் வந்திருக்கிறோம். அதாவது இவைகள் எல்லாம் நீங்கி தெய்வ பக்தியுடன், தெய்வ பயத்துடன் புனித அன்னம்மாள் போல எல்லாம் இறைவனின் சித்தம் என எண்ணி இறைவனிடம் தஞ்சமடைந்து வாழவும், எவ்வாறு தம் மகள் மரியாளை இறைவனுக்கு கீழ் படிந்து வாழ வளர்த்தார்களோ அதுபோல வாழ அழைக்கிறது இத்திருவிழா என்றார் அவர்.

சுற்று வட்டாரங்களிலிருந்து ஏறக்குறைய ஆயிரம் நம்பிக்கையாளர்கள் வந்திருந்தனர். ஏற்பாட்டுக் குழு சார்பில் சகோ. அந்தோனி நன்றி கூறிட, மெழுகுவர்தி சுற்று பவனியும் அதன்பின் நடைபெற்ற விருந்தோம்பலிலும் மக்கள் கலந்து கொண்டு மகிழ்ச்சியுடன் இல்லம் திரும்பினர்.

ஆ.வி.டேவிட்.





## பத்து ஆராங் வட்டாரத்தில் இலவச புற்றுநோய் பரிசோதனை!

நாட்டின் இரண்டாவது உயிர்க்கொல்லி நோயாக விளங்கும் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு, மலேசியர்களிடையே இன்னும் குறைவாக இருப்பதால், அந்நோய் குறித்து முன்கூட்டியே பரிசோதித்து கொள்வதில் பலரும் சுணக்கம் காட்டுகின்றனர்.

இந்த அலட்சியமானது மக்களிடையே பெரும் ஆபத்திற்கு வித்திடும் என்பதால், புற்றுநோய் வருவதற்கு முன்னமே, அது குறித்து முறையாக பரிசோதனை செய்து கொள்ளுமாறு மக்களை அரசாங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

அந்த வகையில் பத்து ஆராங் சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் மக்களுக்கு கடந்த ஜூலை 20ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை தொடங்கி மாலை மணி நான்கு வரையில், புனித மைக்கல் சிற்றாலய வளாகத்தில் இலவச புற்றுநோய் பரிசோதனை நடத்தப்பட்டது. மலேசிய தேசிய புற்றுநோய் கழகத்துடன் இணைந்து ரவாங், புனித யூதா ததேயு தேவாலயமும் பத்து ஆராங், புனித மைக்கல் சிற்றாலயமும் ஏற்பாடு செய்திருந்த இந்த இலவச புற்றுநோய் பரிசோதனையில் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 70 பேர் கலந்து கொண்டனர்.






## போர்ட்டிக்சன் அமல உற்பவ மாதா தேவாலயத்தில் உறுதிபூசுதல் அருட்சாதன விழா

கடந்த 20.07.25 ம் திகதி (ஞாயிறு) அன்று காலை, அமல உற்பவ மாதா ஆலயம் போர்ட்டிக்சனில் (CICPD) யூபிலி ஆண்டின் உறுதி பூசுதல் அருட்சாதனம், நமது கோலாலம்பூர் மாமறை மாவட்ட பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் அன்று காலை திருப்பலியில், புதுமுக கிறிஸ்தவர்களாகி இதுவரைக்கும் உறுதிப்பூசுதல் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கும், அவர்களுக்கானப் பயிற்சி வழங்கப்பட்டு, பேராயர் அவர்களால் மறைக்கல்வி மாணவர்களுடன் சேர்ந்து உறுதிபூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இதில் சபா, சரவாக்கிலிருந்து வந்து போர்ட்க்சனில் பணிபுரியும் படை வீரர்களும் அடங்குவர். அதற்கான ஆலோசனைகளை வழங்கிய பங்குத்தந்தை எட்வின் பீட்டர் அவர்களுக்கும், பயிற்சியளித்த மறையாசிரியர்களுக்கும் பங்கு மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். திருப்பலியைத் தொடர்ந்து, பேராயர், பங்குத்தந்தை, மறைக்கல்வியாசிரியர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் பெற்றவர்களுக்குமாக சிறிய அளவில் விருந்தும் பெற்றோர்களால் வழங்கப்பட்டது.

அன்ரோ வசந்த்



## ஆண்டின் பொதுக்காலம் 19 ஆம் ஞாயிறு – 10-08-2025

### 'வாக்குறுதி, நம்பிக்கை, கடமை'

சாலமோனின் ஞானநூல்: 18:6-9
திருப்பாடல்: 33: 1,12, 18-20, 22
எபிரேயர்: 11: 1-2, 8-19
லூக்கா 12: 32-48 (அ) 12: 35-40

கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே, இன்றைய ஞாயிறு வாசகங்களில் நாம் மூன்றுவிதமான கருத்துகளைப் பார்க்கின்றோம். அவை இறைவன் தம்முடைய வாக்குறுதியை நிறைவேற்றினார் என்னும் மகிழ்ச்சி, இரண்டாவது நாம் எதிர்நோக்கி இருப்பது கிடைக்கும் என்னும் உறுதி மற்றும் நமக்கு கொடுக்கப்பட்ட கடமைகளை முறையாக செய்யவும் அதற்கு நாம் கணக்கு கொடுக்க வேண்டும் என்பவையாகும். இவற்றை உணர்ந்துச் செயல்பட, திருஅவை இன்று நம்மை அழைக்கின்றது.

சாலமோன் அரசர் தம்முடைய நூலில் தம் முன்னோர்களுக்கு இறைவன் தாமே தந்தருளிய வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றினார் என்று மகிழ்கிறார். அவர்களின் பகைவர்களை கடவுள் அழித்து, தம்முடைய மக்களை பெருமைப்படுத்தினார் என்று கூறுகிறார். இஸ்ரயேல் மக்கள் தாங்கள் அடிமை நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு எருசலேமை அடைந்த அந்த நிகழ்வை எப்போதும் மறப்பதே இல்லை. அதனால் அவர்கள் எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருந்தனர்.

எபிரேயருக்கு எழுதிய கடிதத்தின் ஆசிரியரும் அதைப்போலவே புதிய எருசலேமான விண்ணகத்தை நோக்கி எதிர்நோக்கிக் காத்திருக்குமாறு கூறுகிறார். பண்டைய வரலாறான ஆபிராகாமில் இருந்து அவர் தம்முடைய எடுத்துக்காட்டுகளை முன்வைக்கிறார். நாம் இந்த உலகில் தற்காலிக குடிகள்; நம்முடைய எதிர்நோக்கும் இலக்கும் கடவுள் நமக்கு வாக்களிக்கப்பட்ட விண்ணக வீடு மட்டுமே என உணரவைக்கிறார். நாம் எதிர்நோக்கிக் காத்திருக்கும் நன்மை (விண்ணக வீடு) நமக்கு நிச்சயமாய் கிடைக்கும்.

நற்செய்தியில் இயேசு இன்னுமொறு பொறுப்புமிக்க பணியை நமக்குத் தருகிறார். இந்த உலகத்தில் அழியும் செல்வத்தை விடுத்து அழியாத செல்வமான விண்ணகவாழ்வைப் பற்றிக்கொள்ள அழைக்கிறார். இந்த விண்ணகப் பயணத்தின்போது நாம் எப்போதும் விழிப்பாய் இருக்க அழைக்கிறார். இதுபோன்றப் பயணத்தில் நமக்கென கொடுக்கப்பட்ட கடமைகளை எந்தவொரு எதிர்பார்ப்பும் இன்றி செய்திடவும் எந்த நேரத்திலும் நாம் நம்முடைய பொறுப்புகளுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டுமென்பதை எப்போதும் நாம் நினைவில் கொண்டிருக்கவும் வேண்டும். நம்முடைய அன்றாட வாழ்வில், நாம் கண்காணிக்கப்படுவதால் மட்டுமே நம்முடைய கடமையைச் செய்யவேண்டுமென்று இராமல், நம்முள் குடியிருக்கும் தூய ஆவியானவருக்குப் பணிந்து நம் கடமைகளைச் செய்தால், நம் விண்ணகத்தந்தை நமக்கென வைத்திருக்கும் விண்ணக பேரின்பம், நம் உரிமைச் சொத்தாகும்.

பேதுரு கேட்டதைப்போல "ஆண்டவரே, நீர் சொல்லும், இந்த உவமை எங்களுக்கா? அல்லது எல்லாருக்குமா?" என்று நாமும் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது. நமக்கு ஆண்டவரின் கட்டளைகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. அவரின் விருப்பங்களும் வாக்குறுதிகளும் நமக்கு தெரியும். ஆகவே அவற்றை அறிந்தும் அதன்படி நடவாவிட்டால், நமக்குக் காத்திருக்கும் தண்டனை மிகப்பெரிது. மிகுதியாகக் கொடுக்கப்பட்டவரிடமிருந்து மிகுதியாக எதிர்ப்பார்க்கப்படும். அது செல்வமாக இருந்தாலும், நாம் பெற்றுக்கொண்ட திறமைகளாக இருந்தாலும் அவற்றைக் கடவுளின் மாட்சிக்காக நேர்மையோடும், அறிவுத்திறனோடும் பயன்படுத்திட இறைமகன் நம்மை அழைக்கின்றார். சாலமோனின் ஞானத்தை நாம் அறிந்துள்ளோம். அதுபோன்று இறைத்திட்டத்தை நாம் அறிந்து செயல்படுத்த தேவையான ஞானத்தையும் அறிவுத்திறனையும் பெற்று அவர்பணி செய்ய அவரையே நாடுவோம்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.